ஸ்ரீ:

பரபக்ஷ நிராக்ருதி.

ஆநந்தவல்லி மணிப்ரவாள க்ரந்தம்.

பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்யராய் உபயவேதாந்த
ப்ரவர்த்தகராய் (கோழியாலம் ஸ்ரீமத் ஸ்வாமி) என்று
ப்ரஸித்தராய் எழுந்தருளியிருக்கிற
ஸ்ரீமத்ராமாநுஜ மஹாதேசிகரால்
அநுக்ரஹிக்கப்பட்டது.

மதுரை தல்லாகுளம்,
ஸ்ரீமான் K. ராமய்யங்கார் ஸ்வாமியால்


மதுரை, ஸ்ரீஸமய திவாகரம் அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

 1934. [விலை அணா 8.

முகவுரை.

ஸம்ஸ்க்ருதத்தில் அருளிய பரபக்ஷ நிராக்ருதி யென்ற க்ரந்தமானது சாஸ்திரங்களில் பரிச்ரமப்பட்டவர்களுக்கன்றி எல்லோரும் எளிதாய் தெரிந்துகொள்வது அறிதென நினைத்து அநேகர் ப்ரார்த்தனையின் பேரில் (கோழியாலம் ஸ்ரீமத் ஸ்வாமியே) சுருக்கமாய் இந்த க்ரந்தத்தை அருளிச்செய்திருக்கிறார். இதனர்த்தத்தை ஸவ்யாக்யானத்தோடு அறிந்தவர்களுக்கு வேதாந்த விஷயத்தில் ஜ்ஞாதவ்யமான ஸர்வாம்ஸம் நன்றாய் ஜ்ஞாதமாகுமென்பதில் சந்தேகமில்லை. இதில் பூர்வபக்ஷாநுவாதத்துக்கும் கண்டனத்துக்கும் சமமான எண்ணெழுத்துகள் அடையாளமாகக் காட்டப்பட்டிருக்கின்றன. மத்தியில் ஆங்காங்கு பரபக்ஷ நிராக்ருதியில் கண்டுகொள்வது என்பது முதலாய் ப்ரஸ்தாபிப்பது ஸம்ஸ்க்ருத பரபக்ஷ நிராக்ருதியில் கண்டுகொள்க. இது ஸ்வாமியால் ஸாதிக்கப்பட்டு, ஸ்ரீவில்லிபுத்தூர் பண்டித. ஸ்ரீ. உ. வே. தேசிகாசார்யஸ்வாமியால் பூர்ணமாக எழுதி சோதிக்கப்பட்டு அச்சிடப்பட்டிருக்கிறது.

ஶ்ரீ:



ஶ்ரீமதே வேதாந்த ராமாநுஜ மஹாதேஶிகாய நம:
ஶ்ரீமதே ரங்கராமாநுஜ மஹாதேஶிகாய நம:

பரபக்ஷ நிராக்ருதி.

முதல் பரிச்சேதம்.

(தமிழ் மொழிபெயர்ப்பு).

ஶ்ரீமந்நாராயணஸ்ய நத்வாதிஸர்வேஶ்வரம் ।
வேதாந்த லக்ஷ்மணமுநே: பதாப்ஜஸ்ய ப்ரஸாதத: ॥
ஜிஜ்ஞாஸுஜநபோதாய நிராக்ருதி க்ருதோத்தமம் ।
பாஷயா த்ராவிட்யா ஸங்க்ரஹேண ததீயதே ॥

பரபக்ஷ நிராக்ருதி என்ற க்ரந்தத்தின் முதல் பரிச்சேதத்தில் விஸ்தாரமாகச் சொல்லியிருக்கும் பூர்வபக்ஷ ஸித்தாந்தார்த்தங்களை எல்லோரு மெளிதில் உணரும்பொருட்டு, தமிழ்ப்பாஷையில் ஸங்க்ரஹித்து எழுதுகிறோம்.

“ஆநந்தமயோऽப்யாஸாத்” என்பது முதற்கொண்டு “அஸ்மிந்நஸ்ய ச தத்யோகம் ஶாஸ்தி” என்ற வரையில் எட்டு ஸூத்ரங்கள் ஓர் அதிகரணம். இதற்கு ஆநந்தமயாதிகரணமென்று பெயர்.

இதற்கு முந்தின ஈக்ஷத்யதிகரணத்தில், ஸாங்க்யரும் ஆருவது அத்யாயம் ஸத்வித்யா ப்ரகரணத்தில் அசேதநப்ரதாநமாகிய ஈக்ஷணமென்றும் ஸம்ஶயம் சொல்லியிருப்பதால், அங்கு அசேதந

மான ப்ரக்ருதி காரணமாகச் சொல்லப்படவில்லை. ஸங்கல்பம் பண்ணக்கூடிய ஸர்வஜ்ஞனே காரணமாகச் சொல்லப்படுகிறான் என்று நிரூபிக்கப்பட்டது.

இதற்குமேல் அங்கு சொல்லிய ஸங்கல்பம் அசேதநமான ப்ரக்ருதிக்குக் கூடாதாயினும் சேதநனான ஜீவாத்மாவுக்குக் கூடுமாகையால் அவனே காரணமாகலாம். மேலும் ஜீவனைக் காரணமாக ஸ்ருதியிற் சொல்லியிருப்பதால் ஸாங்க்யஸ்ம்ருதியிலும் அதோடு பொருத்தமாக ஜீவனே காரணமாகச் சொல்லப்படுகிறானென்று இசைவது உசிதமாகும்.

ஸ்ருதியில் முதலில் "ப்ரஹ்மவிதாப்நோதி பரம்" என்று ப்ரஹ்மத்தின் ஸ்வரூபம், அதின் உபாஸநம், அதின் ப்ராப்தி, ப்ராப்யம் என்ற நான்கர்த்தங்களைச் சுருக்கமாகச்சொல்லி, ஸூத்ரத்தைக்கொண்டு, இந்நான்கர்த்தங்களையும் விவரிக்கத் தொடங்கி, அதில் ப்ரஹ்ம ஸ்வரூபத்தை "ஸத்யம் ஜ்ஞாநமநந்தம் ப்ரஹ்ம" என்று லக்ஷணத்தைக்கொண்டு நிரூபித்து, அதனுபாஸநத்தை "யோ வேத நிஹிதம் குஹாயாம் பரமே வ்யோமந்" என்று ஹ்ருதயமத்யத்திலிருப்பதாக த்யாநஞ்செய்வதே உபாஸநமாகுமென்று, வ்யாக்யாநம் பண்ணி "ஸோऽஶ்நுதே ஸர்வாந் காமாந் ஸஹ ப்ரஹ்மணா விபஶ்சிதா" என்று ஸர்வஜ்ஞமான ப்ரஹ்மம் ப்ராப்யம் (அடையக் கூடியது) அதன் குணங்களை யனுபவிப்பது ப்ராப்தியாகும் என்று ப்ராப்ய ப்ராப்திகளை ஸ்பஷ்டமாகச் சொல்லி, ஸத்யம் ஜ்ஞாநமென்ற வாக்யத்திலிருக்கும் அநந்தபதத்தினர்த்தமாகிய தேசபரிச்சேதம், காலபரிச்சேதம், வஸ்துபரிச்சேதம் என்ற மூன்றுவிதமான பரிச்சேத (அளவு) மில்லாதது என்பதிலடங்கிய வஸ்து பரிச்சேதமில்லாமையாகிற ஆநந்த்யத்தை, "தஸ்மாத்வா ஏதஸ்மாதாத்மந ஆகாஶஸ்ஸம்பூத:" என்றிவை முதலிய வாக்யங்களாலே, எல்லா வஸ்துக்களுக்கும் உபாதாநகாரணமாயிருக்கையையும், எல்லா வஸ்துக்களுக்கும் ஆதாரமாயிருக்கையையும், ஆத்மாவுக்கு ப்ரதிபாதநம் பண்ணி உப

வாகிக்கக் கடவதாய், ஸ்ருஷ்டியானது ஆகாசாதிகளுக்கு காரணமாகச் சொல்லப்பட்ட ப்ரஹ்ம எவனென்னில்—சரீரத்தோடு ஸம்பந்தித்தவனையும், ஆனந்தவிகாரனையுமுள்ள, ஆனந்தமயனென்று சொல்லப்பட்ட ஜீவனை என்று காண்பிப்பதற்காக அருந்ததீதர்சநந்யாயத்தை யனுசரித்து ப்ராணமயம் முதலியதை, ஆத்மாவாக முதலில் காட்டி மறுபடியும் அவை ஆத்மாவன்று, என்று தடுத்து—விஜ்ஞானமயம் என்று சொல்லப்பட்ட புத்திக்கும் ஆதாரமான ஆனந்தமயனென்று சொல்லப்பட்ட ஜீவனையே, முன் ஆகாசம் முதலியதுக்கு காரணமாகச் சொல்லப்பட்ட ப்ரஹ்மாவாகக் காட்டி முடிக்கிறது; இந்த ஆனந்தமயனுக்குமேல், ஒரு ஆத்மாவைச் சொல்லக் காணாமையாலே ஸர்வஜ்ஞனவிவனே "ப்ரஹ்மவிதாப்நோதி" என்று முதலில் சொல்லப்பட்ட ப்ரஹ்மமென்று ஒப்புக்கொள்ள வேண்டும்; ஜீவனுக்கும் ஸர்வஜ்ஞமான ஐச்வர்யத்தில், ப்ரஹ்மத்வம், உபாஸ்யத்வம், ப்ராப்யத்வம் என்றிவை முதலிய தர்மங்கள் கூடும். அவனுக்கு காரணத்வமுஞ்சேரும். சேதநனாகையாலே ஈக்ஷணத்துக்குக் குறையில்லையிறே. மேலுமிவ்விடத்தில், ஆனந்தமயன் ஜீவனென்றேயொப்புக்கொள்ள வேண்டும். "தஸ்யைஷ ஏவ சாரீர ஆத்மா" வென்று சரீர ஸம்பந்தமும், "ஆனந்தமய:" என்று விகாரத்தை யர்த்தமாகவுடைய மயட் ப்ரத்யயமும், "ஆனந்தமயப்ரா — ஸாயுஜ்யந்தா" மென்று ஸாக்ஷியெ யுண்டுபண்ணக்கூடியதான ஐச்வர்யத்தை யடைந்திருக்கையும், ஜீவனுக்கன்றோ சேரக்கூடியது. இவை மூன்றும், அசரீரமாயும், நிர்விகாரமாயும், நித்யஸர்வஜ்ஞமாயும் ஒப்புக்கொள்ளப்பட்ட ப்ரஹ்மத்துக்குக் கூடுமோ? ஸர்வஜ்ஞ ஜீவனுக்கு சரீரஸம்பந்தம் ஒருசமயமிருக்கக்கூடு மாகையால் அவனை "சாரீரக:" என்று சொல்லக் குறையில்லை; ப்ரஹ்மத்துக்கு அந்த ஸம்பந்தம் எவ்விதத்திலுஞ் சொல்லமுடியாது. ஆனந்தரூபவனன ஜீவனுக்கு கர்ம ஸம்பந்தம் விகாரமாகையாலே, அவனே ஆனந்த விகாரனவான், மயட் ப்ரத்யயத்துக்கு ப்ராசுர்யமர்த்தமென்றிசைந்தாலும், அதிகமான வானந்தமுடையவனென்று ஸித்திக்கையாலே, கொஞ்சம் துக்கமு

முண்டென் றேற்படுகையால் ஜீவ ஸம்பந்தமுள்ள க்ஷேத்ரஜ்ஞன் ஜீவனென்றே முடியும்.

ஆகையாலிந்த ப்ரகரணத்தில் ஜீவனே காரணமென்று விவக்ஷிக்கையாலே இதோடு சேர்த்தியாக, முன்சொன்ன ஸத்வித்யா ப்ரகரணத்திலுமிவ்விதமே யிசையவேண்டும்.

இப்படி இசைந்தாலன்றோ அந்த ப்ரகரணத்தில் காரணமாகச் சொல்லப்பட்ட வஸ்துவை "தத்வமஸி" என்று ச்வேதகேதுவென்றும் ஜீவனைச் சொல்லிமுடிக்கத்தகுது, சேரும்; என்று ஸாங்க்யனோ, அவனை யடியொற்றின மற்றொருவனோ, பூர்வபக்ஷஞ் செய்ய, அதைத் தடுப்பதற்காக விந்த வாக்யாதிகரணம் ஆரம்பிக்கப்படுகிறது.

இவ்விதமான பூர்வபக்ஷத்துக்கு இவ்வதிகரணத்தி லடங்கிய ஸாரமான ஸித்தாந்தமேதென்னில், க்ஷேத்ரஜ்ஞ வென்கிறவிடத்தில் ஜ்ஞ (1) ப்ரக்ருதிக்கு (2) ப்ராதான்யம் ஸித்தமென்றே கொள்ளவேண்டும். அந்த ப்ரகரணத்தில் க்ஷேத்ரத்தை, "தேவ மேகம்" என்று தொடங்கி "யஸ்தாவாவோ நிவக்த்ரோ" என்னு மளவாலே அளவற்றதாகச் சொல்லியிருப்பதையும், ஜ்ஞ ப்ரக்ருதிக்கு ப்ராதான்யமு மஸித்தமென்று மாஸ்த்ரஞ் சொல்லியிருப்பதால் க்ஷேத்ரஜ்ஞவென்கிற பதம் அதிகமான வாக்யத்தையுடைய வஸ்துவைச் சொல்லக்கூடிய ஸக்தியுள்ளது என்பதையும், கண்டால், க்ஷேத்ரஜ்ஞபதத்துக்கு வேறு அர்த்தங்கொள்வது உசிதமாகுமோ? இப்படி இசைந்தால் ஒரு விரோதந்தானுண்டோ?

ஆகையா லிப்படிப்பட்ட வாக்யம் ஜீவனுக்கஸம்பாவிதமாகையாலே, இவ்வாக்யமுடைய க்ஷேத்ரஜ்ஞன் பரமாத்மா வென்றே ஸ்வீகரிக்க வேண்டும். கொஞ்சம் ருக்கமுண்டென்று ஏற்படுமென்பது சரியாகாது. ஸர்வஜ்ஞன் ப்ரவர்த்தகன் ப்ரகாசன் என்றால், கொஞ்சமிரு

(1) விகுதி. (2) அதிகம்.

ளேற்படாதாப்போலே இங்கும் துக்கமேற்படாது. மண் முதலியதைக் குறித்து குடம் முதலியது விகாரமாகிறாப்போலே நித்யனான ஜீவாத்மா ஒன்றைக் குறித்து விகாரமாக மாட்டாமையாலே, ஸூத்ரகாரன் ஜீவனென்று கொண்டாலும் ப்ரஹ்மத்துக்கு விகாரம் ஸம்பவமென்று கொள்ள முடியாது. ஸூத்ரங்களுக்கு கர்மாவலம்பநமாவது—

அவர்கள் செய்த புண்யபாபரூபங்களான கர்மங்களாலே ஸம்ஸாரத்துக்குண்டான நிக்ரஹாநுக்ரஹங்களுக்கு விஷயமாவதே என்று ஶாஸ்த்ரத்தால் ஸித்திக்கையாலே, அதை யாதநாரூபனான ஜீவனுக்கு பரிணாமரூபமான விகாரமென்றுசொல்லுகை ஸங்கதமாகாது. ஒரு வஸ்து வேறு நாமரூபங்களை யடையும்படி பரிணமிக்குமிடத்திலேயே லோகத்தில் விகாரமென்ற வ்யவஹாரங்காண்கையாலும் ஶாஸ்த்ரத்திலும் அப்படிப்பட்ட விடங்களில்தான் விகாராம்ஶத்தில் ப்ரஹ்ம என்று ஏற்படுவதாலும் கர்மாவலம்பநத்தை விகாரமாகக்கொண்டு ப்ரஹ்ம த்ரவ்யத்தை விகாராம்ஶமாக ஸாதிப்பது மிகவும் ஸாஹஸமே யாகும்.

இப்படி ப்ரஹ்ம த்ரவ்யத்துக்கு ப்ராதான்யம் அஸம்பவமென்றே கொள்ளவேண்டுகையால் ப்ரதாநமான பாதநமுடைய பாதநயன் பரமாத்மாவென்று தீர்ந்தது. ஸர்வ வஸ்துக்களையும் ஶரீரமாகவுடையன் பரமாத்மாவென்று ஶ்ருதியில் சொல்லுகையாலே ஶரீர ஸம்பந்தமும் அவனுக்கே மிகவும் பொருத்தமானது—இப்படி. ஶாஸ்யத்வமாவது—ஶக்தி ப்ரவ்ருத்திகளால் ப்ரஸந்நனாகக்கூடியவனா யிருக்கை. ஆகையாலிதுவும் அவனுக்குக் கூடும். தத்வமஸி என்று ஜீவ ப்ரஹ்மாபேதஞ் சொன்னதும், இவ்விரண்டுக்கும் பேதமிருக்கச் செய்தேயே தேவோஹம்ஜாநாமி என்னுமாப்போலே ஶரீர ஶரீரிகளைச் சொல்லும் ஶப்தங்களிரண்டுக்கும் ஸாமாநாதிகரண்யமுண்டென்றுகொள்ளுகையாலே மிகவும் உபபந்நம். மேலும் ஜீவனுக்கு பரிணாமம் மண் முதலியதுகளுக்குப்போல் கொள்ள முடியாதாகையாலே இவனுக்கு உபாதாந காரணத்வஞ் சொல்லமுடியாது.

ப்ரஹ்மத்துக்குப்போல் இவனுக்கு ஜகத்து ஶரீரமன்றாகையாலே ஸூக்ஷ்மமான சிதசித்வஸ்துக்களோடு கூடிக்கொண்டு உபாதாநமாகிறானென்னவுமொண்ணாது, ஸாமாநாதிகரண்யத்தையும் இவ்விடத்தில் ஸம்பந்த விஶேஷத்துக்கு அநுகுணமான பாதத்வஞ் சொல்லியிருப்பதையும் அநுஸரித்து உபாதாநத்வமுமிங்கு விவக்ஷிதமென்று கொள்ளவேணுமிறே.

ஆகையால் காரணத்வஞ் சொன்னது ஆநந்தமயனுக்கு ஜீவத்வத்தைத் தடுக்கும்.

மேலும் "ப்ரஹ்மவிதாப்நோதி பரம்" "ஸத்யம் ஜ்ஞாநமநந்தம் ப்ரஹ்ம" "தஸ்மாத்வா ஏதஸ்மாதாத்மந ஆகாஶஸ்ஸம்பூத:" என்று சொல்லப்பட்ட "ஆநந்தயேனயே ஏஷஹ்யேவாநந்தயாதீ" என்றுஜீவர்களுக்கு ஆநந்தத்தையுண்டாக்குமவனைச் சொல்லியிருப்பதால் இவன் ஜீவனாக மாட்டான். மேலும் பரிஶுத்த ஜீவன் "ஸத்யம் ஜ்ஞாநமநந்தம் ப்ரஹ்ம" என்ற மந்த்ரத்தில் சொல்லப்பட்டவனாகவாகான். "ப்ரஹ்மவித்" என்றவிடத்தில் வித் என்று சொல்லப்பட்ட உபாஸகனான ஜீவனுக்கு உபாஸ்யமாயும் "பரமாப்நோதி" என்றவிடத்தில் ப்ராப்நோதி யென்று சொல்லப்பட்ட உபாஸகனுடைய ப்ராப்திக்கு (௩) கர்மமாய்க்கொண்டு பரம்என்று சொல்லப்பட்டதாயுந்தோற்றிய ப்ரஹ்மத்தையன்றோ "ஸத்யம் ஜ்ஞாந"மென்ற மந்திரஞ் சொல்லுகிறது. இவ்விடத்தில் தோற்றுகிற பேதத்துக்கு பாதகமில்லையாகையாலே (௪) ஸ்வாபாவிகத்வமே கொள்ளவேணும். தத்த்வமஸி முதலியது, பேதமிருந்தாலுஞ் சேருமென்று முன்பே சொன்னோம். ஆகையால் இது பாதகமாகாது.

மேலும் மந்த்ரத்திற் சொன்ன நிர்விகாரத்வ ஸ்வாபாவிக ஸர்வஜ்ஞத்வ (௫) த்ரிவித பரிச்சேதராஹித்யங்கள் ஜ்ஞாநஸங்கோசபர்ய

---

(௩) செயப்படுபொருள். (௪) இயற்கையாகயிருப்பது.

(௫) தேஶ கால வஸ்து.

விகாரமும் வராத (௬) ஸங்கல்பாயத ஜ்ஞானமும், அணுத்வபரிமாணமுமுள்ள ஜீவனுக்குச் சேராதாகையாலே அவ்விடத்தில் பரப்ரஹ்மமே சொல்லப்படுகிறானென்று அவசியங் கொள்ளவேண்டும்.

ஆகையால் ஸேநவணத்தில் தோற்றின ப்ரஹ்மம் பரப்ரஹ்மா வென்று தீர்ந்தமையாலே இத்தோடு அபிந்நனை வாநந்தமய வாக்யம் பரப்ரஹ்ம வென்றே முடிந்தது.

மேலும் ஆநந்தமயன் ஜீவனைக்காட்டில் வேறுபட்டவனென்று "தஸ்மாத்வா ஏதஸ்மாத் விஜ்ஞாநமயாத் அந்யோऽந்தர ஆத்மாநந்தமய:" என்கிற ச்ருதியில் ஸ்பஷ்டமாகவே சொல்லியிருப்பதால் இவ்விஷயத்தில் விவாதப்பட வழியில்லை. அவ்விடத்தில் புத்தி வ்யாபாரமும் புத்தி விகாரத்வமும் புத்திக்குக் கூடாதாகையாலே விஜ்ஞாநமயம் புத்தியென்று சொல்லவொண்ணாமையால் அதை ஜீவனென்றே கொள்ளவேண்டும். அயுக்தங்கொள்ள ஶக்யமானவிடத்தில் ப்ரத்யயத்துக்கு ஸ்வார்த்திகத்வஞ் சொல்லுவதும் உசிதமாகாது. ஆகையால் விஜ்ஞான வ்யாபாரனான ஜீவனே விஜ்ஞாநமயனாவான்; இப்படி தீர்ந்த போது "தஸ்மாத்" என்கிற வாக்யம் ஆநந்தமயனுக்கு ஜீவனிற் காட்டில் பேதத்தைச் சொல்லுகிறதென்று முடிந்தது.

ஶ்லோகம் வாச்யமுள்ள வஸ்துவை விஷயீகரிக்கவேண்டுகையாலும், உபக்ரமத்தை அநுஸரித்து உபஸம்ஹாரத்துக்கு அர்த்தங் கொள்ளவேண்டுகையாலும் ஜ்ஞானம் ஸாதாரணமாகையாலோ, ஸ்வப்ரகாஶதையாலோ, (௭) வ்யுத்பத்தி விஶேஷத்தாலோ, யத்நபரமாகக் கூடுமாகையாலும் "விஜ்ஞாநம் யஜ்ஞம் தநுதே" என்கிறவிடத்தில் விஜ்ஞாநபதம் விஜ்ஞாநமுள்ள வஸ்துவைச் சொல்லுகிறதாகையாலே, இதை புத்திபரமாகக்கொண்டு இதை யனுசரித்து முதலிலிருக்கும் விஜ்ஞாநபதத்தை ஸ்வார்த்திக ப்ரத்யயாந்தமாகச்சொல்லி, விஜ்ஞாநமயம் புத்தியென்று வர்ணிப்பது அநுசிதமேயாகும்.

---

(௬) ஸங்கல்பாயதந (௭) கர்த்ருவ்யுத்பத்தி.

மேலும் "பீஷாஸ்மாத்வாத: பவதே" என்கிற விடத்தில் "அஸ்மாத்" என்று ஆநந்தமயனைச் சொல்லி இவனிடத்திலிருந்து வாயு முதலிய ஜீவர்கள் பயப்படுகிறார்கள் என்று சொல்லியிருப்பதால் ஆநந்தமயன் ஜீவனாக மாட்டான். தண்டிப்பவனிடமிருந்தன்றோ, அபராதமுள்ளவர்களுக்கு பயங்காணப்படுகிறது.

மேலும் நான்முகனளவுமுள்ள ஜீவர்களுக்கு ஏதேனும் ஒரு வஸ்துவை ஸ்ருஷ்டிக்கும்போது ஸங்கல்பத்துக்கு ஹேதுவாக ஶரீராந்தராபேக்ஷை காண்கிறோம். இவ்விடத்தில் ஆநந்தமயனுக்கோ "ஸோகாமயத" என்று அதனபேக்ஷையின்றியே ஸங்கல்பமாத்ரத்தாலே ஸர்வஸ்ருஷ்டியையுஞ் சொல்லாநின்றது. ஆகையால் ஆநந்தமயன் ஜீவனாகான்.

மேலும் "ரஸம் ஹ்யேவாயம் லப்த்வாநந்தீ பவதி" என்கிறவிடத்தில், ஆநந்தமயனை யடைந்து ஜீவன் ஆநந்தமுடையவனாக வாகிறான் என்று சொல்லியிருக்கிறது. இத்தால் ஜீவனுக்கு ஆநந்தத்தை யுண்டுபண்ணும் ஆநந்தமயன் ஜீவனாகமாட்டானென்பது ஸித்திக்கிறது.

இங்குள்ள ரஸ பதம் ஆநந்தத்தைச் சொல்லிக்கொண்டு ஆநந்தமயனைக் காட்டுகிறது.

இப்படிப் பலவித காரணங்களால் ஆநந்தமயன் பரமாத்மாவே ஜீவனன்று என்றேற்பட்டது என்று முன் பண்ணின பூர்வ பக்ஷத்துக்கு பரிஹாரம்.

இவ்வெட்டு ஸூத்ரங்களின் பதங்கட்குப் பொருள் :—

க. "ஆநந்தமயோऽப்யாஸாத்" இது இரண்டு பதம். உபநிஷத்தில் "தே யே ஶதம்" என்று ஆநந்தம் பெருக்கப்பட்டிருப்பதால் ஆநந்தமயன் பரமாத்மா.

உ. "விகாரஶப்தாந்நேதி சேந்ந ப்ராசுர்யாத்" ஆநந்தமயனென்றவிடத்தில் மயட் விகாரார்த்தமாகையால் சொன்ன பக்ஷம்

சரியில்லை யென்பது, பட்டாக்கு வ்யாகரணவிருத்தமாகையால் சரியாகாது.

ங. "தத்தேதுவ்யபதேசாச்ச" (ஆநந்தமயனே ஜீவர்களுடைய) ஆநந்தத்துக்குக் காரணமாய்ச் சொல்லியிருப்பதாலும்,

ச. "மாந்த்ரவர்ணிகமேவ ச கீயதே" "ஸத்யம் ஜ்ஞாநம்" என்ற மந்திரத்தில் சொல்லப்பட்ட ப்ரஹ்மமே ஆநந்தமயனென்று சொல்லப்படுகிறது.

ரு. "நேதரோऽநுபபத்தே:" விபச்சித்த்வம் (தானாகவே ஸகலத்தையுமறிகை) முதலிய குணங்கள் ஜீவனுக்குச் சேராதாகையால் மந்த்ரவர்ணத்தில் சொன்ன ப்ரஹ்மஞ் ஜீவனாகாது.

சா. "பேதவ்யபதேசாச்ச" "விஜ்ஞாநமயாத் — அந்யோந்தர ஆத்மாநந்தமய:" என்று ஜீவனைக் காட்டிலும் வேறாகவே பேதஞ் சொல்லியிருப்பதாலும்,

எ. "காமாச்ச நாநுமாநாபேக்ஷா" இங்கு ஸங்கல்பமாத்ரத்தாலே (ஸ்ருஷ்டி சொல்லியிருக்கிறது) ஜீவர்களுக்கு, ஸ்ருஷ்டிக்கும் போது சரீரம் முதலிய (ஆநுமாநத்)தின் அபேக்ஷை காணப்படுகிறது.

அ. "அஸ்மிந்நஸ்ய ச தத்யோகம் ஶாஸ்தி" ஜீவனுக்கு இந்த ஆநந்தமயனிடத்தில் ஆநந்தஸம்பந்தத்தை சாஸ்திரஞ்சொல்லுகிறது.

இவ்விதமான ஸம்ப்ரதாயமும் ஸ்வரஸமாயும், பாதராயண ஸூத்ர வ்யாக்யாநத்துக் கிணங்கியுமிருக்க, இவ்விதமாகவே தாமும் சற்றேறக்குறைய முதலில் வ்யாக்யாநஞ்செய்து முடிவில் "இதம் த்விஹ வக்தவ்யம்" என்று ஆரம்பித்து ஸ்ரீ ஶங்கராசார்யர் தம்முடைய ஶாரீரக பாஷ்யத்தில் வேறுவிதமாகச் சொல்லியிருக்கும் அர்த்தமும் பொருந்தாது.

அவர் அங்கு சொல்லியிருக்கும் ந்யாயமாவது.—

க. உபநிஷத்தில் முந்தின நாலு கோசங்களிலிருக்கும் மயட்டுக்கு விகாரார்த்தமாகையால் ஐந்தாவது கோசத்திலுள்ள மயட்டுக்கும் அதே அர்த்தங் கொள்ளவேணும்.

உ. ஆனந்தமயத்தினுடைய புச்சத்தை "ப்ரஹ்ம புச்சம் ப்ரதிஷ்டா" வென்று ப்ரஹ்மமாகச் சொல்லியிருப்பதால் ஆனந்தமயத்தையும் ப்ரஹ்மமாக ஒத்துக்கொள்வது உசிதமாகாது. அப்படிக் கொள்ளில் ஒரு வஸ்துவையே புச்சமாகவும் புச்சமுள்ள வஸ்துவாகவும் ஒப்புக்கொள்ளவேண்டிவரும் இது அழகல்ல.

ங. முந்தின கோசங்களுக்கேற்பட்ட ச்லோகங்கள் கோசங்களில் ப்ரதானமான வஸ்துவையே விஷயீகரிப்பதால் இங்கும் (ஐந்தாவதிலும்) அப்படிக் கொள்ளவேண்டும். இவ்விடத்திலோ "அஸந்நேவ" என்கிற ச்லோகம் ஆனந்தமயத்தைச் சொல்லவில்லை. ப்ரஹ்மத்தைச் சொல்லியிருக்கிறது. ஆகையால் கோசத்தில் ப்ரஹ்மமே ப்ரதானமாக ஏற்படுகிறது.

ச. ஆனந்தமயம் ப்ரஹ்மமென்னில் அது ப்ரியமோதாதி ஸாதிசயவிசிஷ்டமாகையால் எல்லோருக்கும் தெரிந்திருக்கும். ஆகையால் அது விஷயத்தில் "அஸத் ப்ரஹ்மேதி வேத சேத்" என்ற சங்கை சேராது.

ரு. அப்ரதானமான புச்சமாகச் சொல்லியிருக்கும் வஸ்துவை ப்ரதானமான ப்ரஹ்மமாக வொப்புக்கொள்வது கூடுமோ வென்னில், ப்ரஹ்ம புச்ச மென்கிறவிடத்தில் "புச்ச" என்பதில் நோக்கில்லை. புச்சம் பக்ஷிகளுக்காதாரமாயிருப்பதுபோல ப்ரஹ்மம் ஸகல வானந்தங்களுக்கும் ஆதாரமாயிருக்குமென்பதில் நோக்கு.

சு. ப்ரியம் மோதம் முதலிய விசேஷமுள்ள வானந்தமயத்தை ப்ரஹ்மமென்று ஒப்புக்கொள்வது, ப்ரஹ்மத்துக்கு ஒரு விசேஷமு

மில்லையென்று சொல்லுகிற "யதோவாசோ நிவர்த்தந்தே" என்கிற மேல் வாக்யத்துக்கு விருத்தமாகும்.

எ. ப்ரஹ்மத்துக்கு வ்யாவர்த்ய த்ரவ்யமென்று கொண்டாலும் ஆனந்த வ்யாவர்த்தமென்றால் கொஞ்சம் துக்கமு முண்டென்று ஏற்படு மாகையால் ஆனந்தமயன் ஜீவனென்றே தீரும். ப்ரஹ்மத்துக்கோ "யதோ வாசோ நிவர்த்தந்தே" இத்யாதி வாக்யங்கள் ஸாவதந்தவிர வேறில்லை யென்று சொல்லுகின்றன.

அ. ஒவ்வொரு சரீரத்திலும் விஷயம் போகம் முதலியது வேறுபட்டிருப்பதால் ஆனந்தமயமும் வேறுபடுமாதலால் இதற்கு ப்ரஹ்மத்வமேற்பட்டுக்கொள்வது. ப்ரஹ்மமொன்றே என்று சொல்லு கிற "ஏகோதேவ:" என்பது முதலிய ப்ரமாணத்துக்கு விருத்த மாகும்.

கூ. ஆனந்தமயம் ப்ரஹ்மமெனில் ஸப்ரதாயமும் சேராது. ஆனந்தமயம் ப்ரஹ்மம் ஆனந்தமயத்தை பலவிடத்தில் மேல் அப்யஸித் திருப்பதால் என்று ஆயமுஞ் சொல்லவேண்டும். மேல் ஆனந்த ஸூத்ரத்தை அப்யஸித்திருப்பதால் இவ்வயமும் பொருந்தாது. விஷய ஸம்பந்தாதி ஸம்பந்தத்தால் ஆனந்தமயம் ப்ரஹ்மம் என்பது தடை பட்டதால் மேல் ஆனந்தவல்லி ஆனந்தமயத்தைச் சொல்லுகிறதென் னவுமொண்ணாது. ஆனந்தமயம் ப்ரஹ்மமென்று நிச்சயமிருந்தா லன்றோ மேலே ஆனந்தவல்லியை ஆனந்தமயவாக்யமாகக் கொள்வது "ஆனந்தமய மாத்மானமுப ஸங்க்ராமதி" என்று ஆனந்தமயத்துக்கு, மேல் அப்யாஸங் காணப்படுகிறதேயெனில், ஆத்மாவல்லாத அதிக்ரமிக் கத்தக்க (தாண்டக்கூடிய) அன்னமயாதிகளோடு சேர்ந்திருப்பதால் அவ் விடத்தில் ஆனந்தமயம் ப்ரஹ்மமாகாது. ஆகையா லிதைக்கொண்டு முந்திய வாக்யத்தை ப்ரஹ்மமென்று சாதிக்கலாகாது. இந்தாவ தான ஆனந்தமயத்துக்கும் அதிக்ரமணம் (தாண்டுதல்) சொல்லியிருப் பதால் வாஸ்தவ ப்ரஹ்ம வ்யாவ்ருத்திரூப ஸம்பந்தம் ஆயமாகச் ஸித்திக்கு மாகையாலே ப்ரஹ்ம வ்யாவ்ருத்திரூப ஸம்பந்தஞ் சொல்லவில்லையென்று

ஸங்க்ஷிக்கவொண்ணாது. "யதோவாவ:" என்று ஸூத்ரத்தை விவரித்துமிருக்கிறது.

ய. "ஸோகாமயத" என்று காரணத்வத்தைச் சொல்லுகிறவிடத்தில், ஸ: என்கிற ஶப்தம் தனக்குக் கிட்டியிருப்பதாலும் வாக்யஸ்வாரஸ்யத்தாலும் ஆநந்தமயத்தைச் சொல்லுகையால் அதற்கு ப்ரஹ்மத்வங் கொள்ளவேணுமென்பது. அதைக் காட்டிலும் கிட்டினதாயும், "தஸ்மாத்வா ஏதஸ்மாத்" என்கிற விடத்தில் வாக்யஸ்த ஶப்தத்தாலே சொல்லப்பட்டதாயுமுள்ள வாஸ்ய ப்ரஹ்மத்தையே—ஸ: என்பது காட்டுகிறதென்று கொள்வது உசிதமாகையாலே சேராது. ஆநந்தமய வாக்யத்தில் விகாரார்த்த மயட் ப்ரத்யயமும் ப்ரியஶிரஸ்த்வாதி தர்மங்களுங் காணப்படுகையால் ஆநந்தமயம் ப்ரஹ்மமாகாமல் போனாலும் இவ்விரண்டுமில்லாமையாலே "ஆநந்தோ ப்ரஹ்ம" வென்றவிடத்தில் ஆநந்தத்துக்கு ப்ரஹ்மத்வமொப்புக்கொள்வதில் விரோதமில்லை. ஆகையால் இவ்விடத்தில் மயட் ப்ரத்யயத்தால் விகாரமும் ப்ரியஶிரஸ்த்வாதிதர்ம ஸம்பந்தமுமுள்ள ஆநந்தமயத்தை நிர்விகாரமாயும் நிர்விஶேஷமாயுமுள்ள முக்ய ப்ரஹ்மமாக வொப்புக்கொள்ளக் கூடாமையாலே ஆநந்தமயன் ஜீவனென்றும் வாஸ்ய ப்ரஹ்மமே முக்ய ப்ரஹ்மமென்றும் ஒப்புக் கொள்ளவேண்டும்.

யக. ஶ்ருதிக்கும் ஸூத்ரத்துக்கும் விரோதம் வரும்போது ஶ்ருதியே ப்ரபலமாகையாலே, அதை யனுசரித்து ஸூத்ரத்துக்கு ஸ்வாரஸமாயாவது மேற்சொல்லுகிறபடி அர்த்தங் கொள்ளவேணும்.

யஉ. அதாவது "ஆநந்தமயாத்" "ஸ்வஸேந ஸம்ஸவதி" என்ற நிர்ணயஶ்லோகத்திலுள்ள ப்ரஹ்ம ஶப்தத்தினுடைய ஸம்பந்தத்துக்கு விஷயமாயிருப்பதால் ஆநந்தமய வாக்யத்தில் சொல்லியிருக்கும் வாஸ்ய ப்ரஹ்மம் ப்ரதாநமாக வாக்யத்தில் ப்ரதிபாத்யமாயுள்ளது.

௰௩. "விகார—ர்யாத்" அவயவ விசேஷத்தைச் சொல்லும் மயட் ஶப்தமிருப்பதால் ப்ரஹ்மத்துக்கு உபாதாந ப்ரக்ருதி வாச்யத்வங் கூடாதென்பது சரியல்ல. அதிகமாக அவயவங்களையே சொல்லும் ப்ரகரணத்தில் அதை யனுசரித்து மயடென்று ப்ரயோகம் பண்ணியிருப்பதாலே.

௰௪. "தத்தேது—ச்ச" ஆநந்தமயம் முதலிய ஸர்வகார்யத்துக்கும் ப்ரஹ்மத்தைக் காரணமாகச் சொல்லியிருப்பதாலும் மயட் ப்ரஹ்மம் உபாதாந ப்ரக்ருதிவாச்யமென்று ஒப்புக்கொள்ள வேணும். தன் கார்யமான வஸ்துவைக்குறித்து, தான் அவயவமாய்க்கொண்டு அப்ரதானமாயிருக்கை யஸம்மதமன்றோ.

இவ்வாறே மேல் ஸூத்ரங்களுக்கும் மயட் வாக்யத்தில் சொல்லியிருக்கும் ப்ரஹ்மத்துக்கு ப்ராதான்யத்தைச் சொல்லக்கூடியதாக வ்யாக்யானஞ் செய்துகொள்ளவேண்டும் என்று ஸ்ரீ ஶங்கராசார்யர் ஆநந்தமயாதிகரணத்தில் முடிவில் நிக்ஷேபித்த விஷயம்.

இவ்விஷயம் ப்ராசீனர்களுக்கு ஸம்மதமாகாது.

௧. நித்யமான ஜீவாத்மா பரமாத்மா இருவருக்கும் ஒரு வஸ்துவைக் குறித்து விகாரத்வஞ் சொல்லமுடியாமையாலே ஆநந்தமய ஶப்தம் ஜீவபரமாயினும் ப்ரஹ்மபரமாயினும் அங்குள்ள புச்சத்துக்கு முந்தின நான்கு கோஶங்களையு மனுசரித்து விகாரவிஷயமென்று கொள்ள முடியாது.

௨. ஒரு வஸ்துவுக்கே அந்தந்த ஆகாரபேதத்தால் அவயவத்வம் அவயவித்வம் என்கிற விரண்டுங் கூடுமாகையாலே ஆநந்தமயத்தை ப்ரஹ்மமாகக்கொள்வதில் விரோதமில்லை. ஒரு ப்ரஹ்மமே மயட்மாயும் புச்ச (இடுப்பு) மாயும் எவ்விதமிருக்கக்கூடுமென்ற கேள்வியில் எதிரிகளுக்கு மிதுவே சமாதானமாக வேணும்

இவ்விடத்தில் அப்பயதீக்ஷிதர் ந்யாயரக்ஷாமணி யென்ற க்ரந்தத்தில் சொல்லியிருப்பதாவது.—

I. வாக்ய ஶப்தம் லக்ஷணையால் அர்த்தத்தைக் காட்டுகிறது. ஆகையால் எங்கள் பக்ஷத்தில் அவயவகல்பநம் கிடையாது. மேலும் அந்த வ்யாகரணம் ப்ரஹ்மத்தினிடம் ப்ரவ்ருத்தத்தை யாரோபித்தும் பிறகு அதிலிருந்து கழித்தும் ப்ரஹ்மம் நிஷ்ப்ரபஞ்சமென்று நிரூபிக்க வ்யவஸ்தித்திருப்பதால் அவ்விடத்தில் ஹ்ருதயம் கோஷம் முதலிய ஶிரஃ பக்ஷாதி அவயவங்களைக் கற்பிப்பது உபபந்நமாகாது என்று. இவ்வர்த்தம் சேராது.

வாக்ய ஶப்தம் அர்த்தத்தைக் காட்டுமாகில் அங்குள்ள ஶிரஸ்ஸு முதலிய பதங்கள் (அ) அஸம்பந்தங்களாக ப்ரஸங்கிக்கும். ஆநந்தமயனுக்கு வாஸ்தவத்தில் ஶிரஸ்ஸு முதலியதில்லாமையால் சிரஸ்ஸு முதலிய பதங்கள் தன் பொருளைச் சொல்லாது. லக்ஷணா தோஷத்தால் வேறு அர்த்தமும் கொள்ளவுமொண்ணாது. ஶிரஸ்ஸு முதலியது ஆநந்தமயத்துக்கு அர்த்தமன்றாகையால், அர்த்தமு மர்த்தமாகாது. ஆகையால் ஶிரஃ பக்ஷாதிபதங்கள் முந்தின வாக்யங்களை யனுசரித்து கல்பிக்கப்பட்ட ஶிரஸ்ஸாதி அர்த்தங்களோடு கூடிய வஸ்துக்களைக் காட்டுகிறதென்றே ஒப்புக்கொள்ள வேண்டும்.

இப்படியாகில் ப்ரஹ்மத்துக்கும் வாக்யார்த்த கல்பநத்தை விடமுடியாது. இப்படியல்லாதபோது ரூபவாக வ்யாகரணத்துக்கு ஸாம்யமும் வரும். கல்பிதமான வாக்யார்த்தத்தால் வரும் அப்ராமாண்யத்துக்கும் வாஸ்தவமான ப்ராமாண்யத்துக்கும் விரோதமில்லாமையாலே ப்ரமாணமான ப்ரஹ்மத்துக்கு அப்ராமாண்யத்தைக் கொடுக்கக்கூடிய வாக்யார்த்த கல்பநங்கூடுமோவென்ற ஸம்சயம் கூடாது. அஸ்வதந்த்ரான ஸ்ரீராமனுக்கு நிஜமான ஸ்வாதந்த்ர்யமில்லையோ? வ்யாகரணம் நிர்விஶேஷமன்று என்பதை மேல் விஸ்தாரமாகச் சொல்லக்கடவோம்.

மேலும் அவயவகல்பந மங்கீகரியாதபோது "தஸ்ய ப்ரியமேவ ஶிரஃ" என்ற சந்தர்ப்பமே வ்யர்த்தமாகும். "ஆத்மாநாய ப்ரபோ

(அ) அந்வயமில்லாததாக.

ஜநா ஸாவாத³" என்ற ஸம்ருத விரோதமும் வரும். இங்கு அவயவக்ஷமுமுண்டு என்றன்றோ ஸம்ருதத்தில் ஏற்படுகிறது. இப்படியாகையால் "ப்³ரஹ்மவிதா³ப்னோதி" என்ற விடத்திலுள்ள ப்³ரஹ்ம ஶப்³த³மே "ப்³ரஹ்ம வாக்³ரூபம்" என்ற விடத்திலுமிருப்பதால் இதுவே ஸாக்ஷாத் ப்³ரஹ்மமாகும் என்பதும் சரியன்று. "ப்³ரஹ்மவிதா³ப்னோதி" என்ற உபக்ரமத்துக்கு இந்த ஆநந்த³ வாக்யத்தில் உபஸம்ஹாரமென்று ஞாபிக்க இவ்விடத்தில் ப்³ரஹ்மஶப்³த³ம் இருப்பதாலும்.

ங. முந்தின வாக்யங்களிலுள்ள ஶ்லோகங்கள் வாக்³ரூபமுள்ள வஸ்துவையே விஷயீகரிக்கையால் இங்கு மப்படியே கொள்ளவேண்டும். வாக்³ரூபத்தாலே விஷயீகரிக்கிறதென்ற வைஷம்யங் கூடாது. ஆநந்த³மே ப்³ரஹ்மமென்று பல காரணங்களால் ஸித்³தித்ததால் "அவஸந்ந" ஶ்லோகத்தில் ப்³ரஹ்ம ஶப்³த³த்தால் நிர்தே³ஶத்துக்குங் குறையில்லை.

II. ந்யாயரக்ஷாமணியில், "அஸந்நேவ" என்கிற தைத்திரீய வாக்ய ஶ்லோகம் வாக்³ரூபமுள்ள வஸ்துவைச் சொல்லாமையாலே கீழ்ச்சொன்ன நியமஞ் சேராது. அந்த ஶ்லோகம் ப்³ரஹ்மத்தை யன்றோ சொல்லுகிறது. தைத்திரீயத்தைச் சொல்லவில்லையே "அஸ்மாத்³வா ஏதஸ்மாத்" வென்று சொன்னதே போருமென்னில், இங்கும் ஆநந்த³த்தைக் குறிக்கும் "ஸ:" என்பதே போரும். இவ்வளவிலும் ஆநந்த³த்துக்கு ப்³ரஹ்மத்வ மேற்படாது. மேலும் இவ்விடத்தில் "ஸ:" என்பது முன்சொன்ன வாக்யத்தையே காட்டுகையாலே அதற்கு ப்³ரஹ்மத்வஞ் சேராது. அதைக் காட்டிலும் வேறாகவன்றோ ஶ்லோகத்தில் ப்³ரஹ்மம் நிர்தே³ஶிக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னதும் ஸங்க³தமாகாது.

தைத்திரீயவாக்ய ஶ்லோகத்துக்கு—பரிஶுத்³த⁴மான தேஹத்தால் ப்³ரஹ்மத்தின் ஆநந்த³த்தை (க) அபரிச்சி²ந்நமாக வறிந்தவனுக்கு ஸம்

(க) அளவிறந்ததாக.

ஸாரஸ்யமில்லையென்று ஸம்ஶயமாகையாலே ஸந்தேஹமுள்ள வஸ்துவை விஷயீகரிக்கிறது ஶ்லோகமென்பதற்கு விரோதமில்லை.

அதை விஷயீகரிப்பதாவது—அதை ப்ரஸம்ஸிப்பதே, அதைச் சொல்லுவது மாத்திரமன்று. ஜ்ஞானமறிந்தவனுக்கு ஸம்ஶயமில்லையென் கையாலே ஸம்ஶயா நிவ்ருத்திக்கு காரணமாகத் தோற்றின ஜ்ஞான க்கு ப்ரஸம்ஸை விவக்ஷிக்கிறது. ப்ரஸம்ஸை முந்திய நாலு ஶ்லோகங்களிலுங் காண்கையால் "கஸ்ய வேத" என்றவிடத்திலுமிப்படியே கொள்ளவேண்டும். "ஸ:" என்பது, ஆநந்தயத்தைக் காட்டினு லும், அதற்கு ப்ரஸம்ஸை விவக்ஷிக்காது. அறிந்தவன் ஸத் அறி யாதவன் அஸத் என்றால் உள்ளதைச் சொன்னதாகுமே தவிர ப்ரஸம்ஸையாகாது. இங்கு ஒரு குணமுந் தோற்றவில்லையன்றோ. இவ்விடத்தில் ஸ: என்பது (ய) ப்ரக்ருதபராமர்ஶியன்று என்பதையும் அப்படி ஒப்புக்கொண்டாலும் விஜ்ஞாநயத்தையே காட்டுமென்பதையும் விஸ்தாரமாக பரபக்ஷ நிராக்ருதியில் கண்டு கொள்வது.

III. ஶ்லோகங்கள் ஸவயவியைச் சொல்லுகிறது என்பது முதல் பர்யாயத்திலேயே அப்படிக் காணுமையாலே உபபந்நமாகாது. அங்கு அந்நத்தையன்றோ சொல்லியிருக்கிறது. அந்நவிகாரமான ஶரீரத்தைச் சொல்லவில்லையே யென்பதும் சரியன்று.

அவ்விடத்திலும் "தஸ்யேதமேவ ஶிர:" என்று அந்நயத் துக்கு ஶிரஸ் முதலியதைச் சொல்லி "ததப்யேஷ:" என்று மேல் சொல்லப்போகிற ஶ்லோகத்துக்கு கீழ்ச்சொன்ன அந்நய விஷ யத்வத்தையுங் காட்டி ப்ரவர்த்திப்பிக்கப்பட்டிருக்கும் ஶ்லோகத்துக்கு அந்நய விஷயத்வமில்லை யென்பது ஸங்கதமாகாதன்றோ ஸவயவியை விஷயீகரிக்கையாவது—அதைச் சொல்லும் ஶப்தத்தோடே கூடி யிருக்கையென்று நாம் சொல்லவில்லை. அது ஸவயவியை ப்ரஸம் ஸிக்கையே என்று முன்பே சொன்னோம். இவ்வழியை யெதிரிகள்

(ய) முன் சொல்லியதை வாங்குகிறதில்லை.

அவலம்பிக்கில் "அஸந்நேவ" என்கிறவிடத்தில் ஶூந்ய ப்ரஶம்ஸையே ஏற்படுமாகையால் அதற்கு முன்பின் சந்தர்ப்பம் முழுமையும் ஶூந்ய விஷயமாய்த்திரும். இது முழுமையும் வாஸ ப்ரஹ்ம விஷயமென்பவர்களுக்கு விருத்தமே.

ச. ஶூந்யம் ப்ரஹ்மமானாலும் அதன் ஶூந்யத்தையளவற்றதாக வறிகை உசிதமாகையாலே அதுவிஷயத்தில், (கக) அஸத்த்வாஶங்கைக்கு விரோதமில்லை. ஶூந்யாபாவம் ப்ரஹ்மமென்பவர்களும், இந்த ஸமாதானத்தையே இசையவேண்டும்.

ரு. ப்ரஹ்மத்துக்கு வாஸத்வத்தை விவக்ஷிக்கில் அதற்குள்ள ப்ராமாண்யம் போய்விடுமென்று நினைத்து சொல்லியிருக்கும் வாஸத்வத்தை விடுவதும், சொல்லாத ஆதாரத்வத்தை விவக்ஷிப்பதும் உசிதமாகாது. இத்தால்வரும் அப்ராமாண்யம் ஸ்வாபாவிகமாயுள்ள ப்ராமாண்யத்தைத் தடுக்காதென்று த்ருஷ்டாந்தத்தோடு முன்பேசொன்னோம். ஆதாரத்வத்தை விவக்ஷிப்பதில் ப்ரயோஜனமில்லாமையோடு [illegible] ப்ரகரண விரோதமும் வரும்.

மேலும் பக்ஷிகளுக்கு வாஸம் ஆதாரமாக வ்ருக்ஷத்தில் காணப்படாமையாலே பக்ஷிகளுக்கு வாஸம்போல் என்று எடுத்த த்ருஷ்டாந்தமுஞ் சேராது. பக்ஷிகள் வாஸத்தி லுட்கார்ந்துகொண்டிருப்பதை யொருவரும் பார்க்கவில்லையன்றோ. இப்படியே லௌகிகாநந்தங்களுக்கு ப்ரஹ்மமாதாரமென்று சொன்னதும் ஸ்வஸித்தாந்தத்துக்கு விருத்தமே யாகும். லௌகிகபாவங்களுக்கு ப்ரஹ்மமாதாரமென்றுகொள்ளில் கடத்துக்கு ஆதாரமான ம்ருத்திகத்தை கடவத் என்று சொல்லுமாப்போலே பாவங்களுக்கு ஆதாரமான ப்ரஹ்மத்தையும் ஶூந்யவத் என்று சொல்லக்கூடு மாகையாலே ஶூந்யமென்பது ப்ரஹ்மமாகாது என்று இவர் ப்ரயாஸப்பட்டு ஸாதிக்க ஆரம்பித்தது தலைக்கட்டாது. அலௌகிகமான ஆநந்தத்

(கக) இல்லையே என்ற சந்தேகம்.

துக்கு ப்ரஹ்மாச்ரயமென்று நாம் சொன்னோம். ப்ரஹ்மம் நிர்வி-சேஷமென்று சொல்லுமிவர்களோ அநாதிகமான அஜ்ஞாநத்துக்கு ப்ரஹ்மாச்ரயமென்று சொல்லிமுடித்தார்களாயிற்று.

IV. ‹‹ தஸ்ய ப்ரியமேவ சிர: ›› என்றிவை முதலிய வாக்கியங்களாலே ஆநந்தமயத்துக்கு ப்ராதாந்ய மேற்படும் முன்னமே வாக்யத்தைக்காட்டில் பிரபலமான ப்ரஹ்மபத ச்ருதியால், புச்ச ப்ரஹ்மத்துக்கே ப்ராதாந்ய மேற்பட்டுவிடும் என்று சாஸ்த்ர தர்ப்பணத்தில் சொன்னதும் சரியாகாது. ப்ரஹ்மபதம்போல் ஆநந்தபதமும் ச்ருதியாகையாலே அதன் ப்ராதாந்யத்துக்கு முன் சொன்ன வாக்யாபேக்ஷை அநாவச்யகமே, ‹‹ தேயசம் முதலான வாக்கியத்தாலேயே ஆநந்தரூபம் ப்ரஹ்மமென்று அறியவேண்டுமே எனில், ப்ரஹ்மபதத்துக்கும் ப்ரக்ருதி முதலிய பதங்களில் ப்ரயோகமிருப்பதால் இங்கு ப்ரஹ்மபதம் பரப்ரஹ்மபரமென்பதிலும் வாக்யாபேக்ஷையை விடமுடியாது. வாஸ்தவத்தில் கல்பிதமான பேதத்தால் வரும் அப்ராதாந்யத்துக்கும் ஸ்வாபாவிகமான ப்ராதாந்யத்துக்கும் முன்சொன்ன ந்யாயத்தாலே விரோதமில்லையாகையால் இவ்விடத்தில் அந்த ந்யாயத்துக்கு அவகாசமேயில்லையென்றறியத்தக்கது.

௫. ‹‹ யதோவாச: ›› என்ற மேல் வாக்கியம் ப்ரஹ்மத்துக்கு (௧௨) நிரதிசயமான ஆநந்தஸ்வ விசேஷமுண்டென்றே ப்ரதிபாதநம் பண்ணுகிறதென்பதை நன்றாக ப்ரதிபாதநம் பண்ணப் போகிறோமாகையாலும் முதலிலிருக்கும் ச்ருதியை பின்வரும் வாக்கியத்தை யனுசரித்து விடமுடியாதாகையாலும் முந்திய வாக்யத்தை யனுசரித்தே பிந்தின வாக்கியத்துக்கு அர்த்தங்கொள்ள வேண்டுகையாலும் ப்ரியம் மோதம் முதலிய விசேஷமுள்ள ஆநந்தமயத்தை ப்ரஹ்மமாக ஒப்புக்கொள்வதில் விரோதலேசமும் கிடையாது.

---

(௧௨) ஒப்பற்ற.

௭. ப்ரதாந ப்ரகாசன் ஸூர்யன் என்கிற விடத்தில் ஸூர்யனிடத்தில் கொஞ்சமு மிருளேற்படாது. சந்திரன் முதலானதுகள் சூரியனைக்காட்டில் குறைந்த பிரகாசமுள்ளதுகளென்றே யேற்படும். அப்படியே இங்கும் ப்ரஹ்மம் ஆநந்த ப்ரதாநமென்றால் ஜீவன் அதைக்காட்டிலும் குறைந்த வாநந்தமுடையவனென்று ஏற்படுமென்பதே உசிதம். ப்ரகரணத்தில் "தேயேசதம்—ப்ரஹ்மண ஆநந்தஃ" என்று ஜீவாநந்தத்தைக் குறைந்ததாகச் சொல்லியிருப்பதாலும் இப்படியே கொள்ளவேண்டும். ப்ரகரணத்தில் சொல்லியிருக்கும் அர்த்தத்தைவிட்டு ப்ரமாணங்களுக்கு விருத்தமாக ஆநந்தமயத்துக்கு துக்கத்தை யொப்புக்கொள்வதை ப்ராமாணிகர் ஸ்வீகரியார்.

V. பாணிநீயத்திலும் ந்யாயரக்ஷாமணியிலும் ப்ராதாந்யம் விசேஷணமாகில் வேறிடத்தில் அதே பதார்த்தத்தைக் குறைந்ததாகக் காட்டும். விசேஷ்யமாகில் அதேயிடத்தில் அதற்கு விருத்தமான அர்த்தத்தைக் கொஞ்சமுள்ளதாகக் காட்டும். ப்ரதாந ப்ராஹ்மணோ க்ராமஃ என்றவிடத்தில் வேறு கிராமத்தில் ப்ராஹ்மணர்களுடைய குறைவு தோற்றுகிறது. ப்ராஹ்மண ப்ரதாநோ க்ராமஃ என்றவிடத்திலோ அதே கிராமத்தில் அப்ராஹ்மணரும் கொஞ்சமுளர் என்று தோற்றுகிறது. ஆகையால் ஆநந்தமயவென்றவிடத்தில் ப்ராதாந்யம் விசேஷ்யமாகையால் ப்ரஹ்மத்தினிடமே ஆநந்தத்துக்கு விருத்தமான துக்கமும் ஒப்புக்கொள்ளவேண்டும். ஆகையால் ஆநந்தமயம் ப்ரஹ்மமாகாது என்று சொன்னதும் சரியல்ல.

ப்ராதாந்யத்துக்கு விசேஷணத்வ விசேஷ்யத்வங்களை நிர்தீகரித்து அர்த்தஸ்வபாவம் வர்ணித்தது. கேவலம் தன்னிச்சையாலேயே ப்ரதாநஜ்ஞாநோ ப்ராஹ்மணஃ, ப்ரதாநராஷ்ட்ரோ ராஜா, ப்ரதாநதநோ வைஸ்யஃ, ப்ரதாநபசுஃ ஸூத்ரஃ, ப்ரதாநதேஹோ கஜஃ என்றிவை முதலியதைக் காட்டிலும் ஜ்ஞாநப்ரதாநோ ப்ராஹ்மணஃ, ராஷ்ட்ரப்ரதாநோ ராஜா, தநப்ரதாநோ வைஸ்யஃ, பசுப்ரதாநஃ ஸூத்ரஃ, தேஹப்ரதாநோ கஜஃ என்றிவை முதலியவைகட்கு

ஸம்ஶயத்தை ஒருக்காலும் ப்ராமாணிகர் இசையார். ஸஜாதீயம் வ்யாவ்ருத்தமான ப்ரகாஶம் என்றால் புலிக்கு கொஞ்சம் தமஸ்ஸம்பந்தம் மேற்படாதாகையாலும், இவர் கட்டின நியமமுஞ் சேராது. இப்படிப் பட்ட ப்ரயோஜனமே யில்லையென்று அவரால் சாதிக்கவும் முடியாது. ஆகையால் ப்ராகாஶ்யத்தின் விஶேஷணத்வமாவது விஶேஷ்யத்வ மாவது இவ்வித ஸம்ஶயத்துக்குக் காரணமாகாது. ஆங்காங்குள்ள ப்ரகரணத்தையும் அந்தந்த பதார்த்தத்தின் ஸ்வபாவத்தையும் யோசித்து ஸம்ஶயஞ் சொல்லவேண்டும். தம: ப்ரகாஶா நிவ்ருத்தா என்றாலும் ப்ரகாஶாத் தம: நிவ்ருத்தா என்றாலும் குஹையில் இருளதிகமென்ற ஸம்ஶயமே தோன்றும். குஹையின் ஸ்வபாவத்தை யோசித்தால் அங்கு கொஞ்சமும் பிரகாசமிராதாகையாலே தம: ப்ரகாஶாவென்றால் குஹையில் கொஞ்சம் பிரகாசமுண்டென்று ஸம்ஶயஞ் சொல்லவொண்ணாது. இப்படியே ப்ரகாஶ தம: என்றாலும் ப்ரகரணமில்லாவிடில் வீடு முதலிய வேறு இடங்களில் கொஞ்சமிருள் உளதென்ற ஸம்ஶயமும் தோன்றுது. இப்படிப் பல உதாஹரணங்களை பரபக்ஷ நிராக்ருதியில் கண்டுகொள்வது.

இங்கு ப்ரகரணத்தையும் வஸ்து ஸ்வபாவத்தையும் யோசித்தால் ப்ராகாஶ்யம் விஶேஷ்யமாயினும் விஶேஷணமாயினும் ஸுகத்துக்கு துக்கஸம்பந்தம் மேற்பட வழியில்லை.

அ. ப்ரியம் மோதம் என்றவிடத்தில் லௌகிகமான பாவ விஶேஷங்களைச் சொல்லவில்லை. இஷ்டவஸ்துவைப் பார்ப்பதாலும் அடைவதாலும் அதையுபயோகிப்பதாலும் உண்டானதாயும் ஸுகத்துக்கே அஸாதாரணமாயுள்ள பாவ விஶேஷங்களையே ப்ரியமோதாதி பதங்கள் சொல்லுகையாலே இவ்விதமான நாநாவித பாவ விஶேஷங்களுக்கு ஆஶ்ரயமான ஸுகம் அநேகமாகக் குறைவில்லை. ஸக்தர்களே அவனுக்கு இஷ்டவஸ்துவாகையாலே இவ்வித பாவங்கள் அவனுக்குக்கூடும். பதங்கள் வேறுபட்டால் பதார்த்த வேறுபடுமென்

பது ஒரு வஸ்துவுக்கு கார்யபேதத்தாலும் காரணபேதத்தாலும் அநேக ரூபங்கள் காண்கையால் ஸம்பவமாகாது.

கூ. "ஆநந்தோ ப்ரஹ்ம" "ரஸோவைஸ:" என்றவிடங்களில் ரஸ ஆநந்த சப்தங்கள் "ஸ ஏகோ ப்ரஹ்மண ஆநந்த:" "ஆநந்தமய மாத்மாநமுபஸங்க்ராமதி" என்ற வ்யதிரேகார்த்த வாக்யங்களை யனுசரித்து ஆநந்தமய ஸ்வரூப ஸமாநாதிகரண்யங்களாக வர்த்திக்கும். முந்தின ஆநந்தமய ஸ்வரூபமோ ப்ரதாநமான ஆநந்தமுடைய வஸ்துவைக் காட்டுகிறதென்று முன்பே ஸாதித்தோம். அதை யனுசரித்து "ஆநந்தமய ஸமாஸ" மென்றவிடத்திலும், அதே அர்த்தங்கொள்ள வேணும். ஆகையால் ஸமாத்யந்தத்தில் விரோதமில்லை. விஷயம் சேஷம் முதலியது ப்ரஹ்மத்துக்கு அஸாதாரணமான ஸ்வவிசேஷமேயென்று நிரூபித்தபடியால் இதன் ஸம்பந்தம் ஆநந்தமயம் ப்ரஹ்மமென்ற நிச்சயத்தைத் தடுக்காது. இதற்கு அநேகப்ரமேய யாகும். இப்படிப்பட்ட விஷயசேஷாதிகளை பாஹ்ய ஸௌகர்யத்துக் காக ஸிரஸ்ஸ முதலியதாக நிரூபித்திருக்கிறதென்பதை முன்பே சொன்னோம். முன்சொன்ன யுக்தியாலும், சொல்லப்போகிற யுக்தி யாலும் ப்ரக்ருதிக்கு விகாரமயமாகக் கொள்ளமுடியாதாகையாலும் "யதோவாசோ" என்று ப்ரஹ்மத்துக்கு அபரிமிதமான ஆநந்தமுண் டென்பதையே சொல்லுகையாலும், பத்த ஜீவர்களுக்கு பஹுவித மான துக்கசம்பந்தம் ப்ரமாணத்தால் ஏற்படுகையாலும், ஸ்வர்கள் ஆநந்தமும் பரமாத்ம ஸம்பந்தாயீநமாகையாலே நிரதிசயமன்றாகை யாலும், ஆநந்தமய ஸ்வரூபம் ப்ரஹ்மத்தைச் சொல்லவேண்டியதென்றே கொள்ளவேண்டுகையால், "ஆநந்தமய மாத்மாந முபஸங்க்ராமதி" என்றவிடத்தில் அந்நமயாதிகளுடைய சேர்க்கை (மக) கார்யகர மாகாது. உபஸங்க்ராமதி என்பதற்கு ஸாரஸ்யத்தாலும் உப ஸம் என்ற இங்குள்ள இரண்டு உபஸர்க்கங்களோடு கூடியதும் க்ரமி யாதுவுக்கு ஸமாநார்த்தமாயுமுள்ள ப்ராப்தி என்கிற யாதுவின

(மக) காரியத்தை சாதிக்காது.

லுண்டானதான உபலக்ஷணத்தைச் சொல்லுகிறது என்பதற்கு ப்ரமாணம் இல்லையென்பதை எதிரிகளும் ஒப்புக்கொண்டிருப்பதாலும், ப்ரமாணமே இல்லையென்று கொள்ளவேண்டுகையால் அதிகரணத்தை இல்லையென்று கொண்டு ஸூத்ர ப்ரஹ்ம ப்ரமாணங்களைச் சொல்லியிருக்கிறது என்று வாதிக்கை உசிதமாகாது. அவர்களும் ஸப்தத்தால் சொல்ல வேண்டிய அர்த்தத்தை இல்லையென்று சொன்னதும் சரியாகாது. இப்படி முன்பு சப்தத்தால் அர்த்தஞ் சொல்லப்படவில்லை யென்னில், தத்வமஸி என்கிறவிடத்தில் தத் என்பது அர்த்தத்தைக் காட்டாதாகையால் யதோவா என்பதற்கு (கச) ஸாதாரண ஸம்பந்தம் ஏற்படாதாகையாலே இது அர்த்தத்தை விஸ்தரிக்கிறதென்பது எப்படிச் சேரும்?

மேலும், ஸூத்ரவ்ருத்தியில் "ஆநந்தமய ஜீவ உபலக்ஷணம்" என்கிறவிடத்தில் ஜீவர்களுக்கும் ஸாதாரணமான விசேஷங்களைச் சொல்லுகிற மேல் ஸூத்ரத்தை யனுசரித்து (கரு) நிர்குண ப்ரஹ்ம ஸாதாரணமான அர்த்தம் இல்லையென்று கொள்ள முடியாதாகையாலே ஆநந்தமயம் ஜீவனென்றும் உபலக்ஷணம் ப்ரமாணமென்றும் அங்கீகரித்து அர்த்தத்தை ஸூத்ரமே சொல்லியிருக்கிறதென்றே அவர்களும் கொள்ளவேண்டும். இப்படியான பின்பு அதை யனுசரித்து இங்கு அர்த்தங்கொள்ளுகை மிகவுமுசிதமாகும்.

ஸ்ரீசங்கராசார்யர் ஆநந்தவல்லியில் இந்த ப்ரகரணத்தில் சொன்ன அர்த்தமாவது, "ஸர்வஜ்ஞத்வம்" உத்கர்ஷாபகர்ஷங்களை விட்டு அத்விதீயமாயும் ஸத்யமாயும் ஜ்ஞானஸ்வரூபமாயும் ஆநந்தமாயுமுள்ள ப்ரஹ்மமாக ஆகிறேனென்று அறிந்தவன். "அஸ்மாத் லோகாத்" த்ருஷ்டமாயும், அத்ருஷ்டமாயுமுள்ள இஷ்டமான அர்த்த ஸமுதாயரூபமான லோகத்திலிருந்து "ப்ரேத்ய" திரும்பி— அதிலபேக்ஷையில்லாதவனாகி "அந்நமய—ஆத்மாநம்" ஸூக்ஷ்மமான ஸகல விஷயங்களையும் ஸரீரமாகவே பார்க்கிறான். சரீரத்தைக்

(கச) மிகவும். (கரு) நிர்க்குணப்பிரம்மமாகவாகிறது.

காட்டிலும் வேறு வஸ்துவைப் பார்க்கவில்லையென்று தாத்பர்யம். இப்படியே மேலுங் கண்டுகொள்வது. "ப்ரஹ்மவிதாப்நோதி" என்பதற்கு ஒரு வஸ்து வேறு வஸ்துவாக வாகாதாகையாலே ப்ரஹ்மஜ்ஞாநமுள்ள ப்ரஹ்மம் ப்ரஹ்மமாய் விடுகிறதென்று அர்த்தம், அப்ரஹ்மமான ஶரீராதிகளில் ப்ரஹ்மமென்று ஏற்பட்ட ப்ரமம் நஶிக்கிறதென்று தாத்பர்யம். இவ்விடத்தில் ஜ்ஞாநத்தையே ஸாதநமாகச் சொல்லியிருப்பதால் ப்ரமநிவ்ருத்தியே பலமென்று ஒப்புக்கொள்ளவேண்டும். ஜ்ஞாநத்துக்கு அஜ்ஞாநநிவ்ருத்திபலமென்றன்றோ வ்யவஸ்தை, "இவ்விடத்தில் ப்ரஹ்மத்தைக் காட்டிலும் வேறுபட்ட ஜீவனுக்கு கர்மத்தோடு கூடிய ஜ்ஞாநத்தால் ப்ரஹ்மப்ராப்தி யென்ற ஓர் பலமுண்டாகிறதென்று சொல்லுகிறது" என்னில் மோக்ஷம் அநித்யமாக ப்ரஸங்கிக்கும். கர்மங்களால் ஸாத்யமான ஸ்வர்க்காதிகள் அநித்யமாகவன்றோ காணப்படுகின்றன. மேலும், அசேதநமாயிருந்தபோதிலும் ஆகாஶம் தனக்குக் கிட்டின ஜலத்தில் ப்ரதிபலிக்குமாப்போலே, அசேதநமாயினும் ப்ரஹ்மம் அவித்யையில் ப்ரதிபிம்பிதமாய் ஸ்ருஷ்டிக்குப்பிறகு அந்தஃகரணம் முதலிய விடங்களில் ப்ரதிபலிக்கிறது என்றர்த்தமுள்ள "தத்ஸ்ருஷ்ட்வா ததேவாநுப்ராவிஶத்" என்கிற ஶ்ருதி விரோதம் வருகையாலே தோஷந்தோன்றக் கூடிய அர்த்தத்தை இங்கு சொல்லக்கூடாது.

மேலும் "அபயம் ப்ரதிஷ்டாம்விந்தே" என்று ஜ்ஞாநமுள்ளவனுக்கு பயமில்லையென்று சொல்லியிருப்பதால் இந்த ப்ரகரணத்தில் இரண்டாத்மாக்களை ஒப்புக்கொள்ளவே கூடாது. அப்படிக்கொள்ளில் ஒருவனுக்கு மற்றொருவரிடமிருந்து பயம் ஸித்தமாகையாலே அபயப்ரதிஷ்டமென்று சேராது. எங்கும் நிறைந்த ஆத்மாவுக்கு கமநங் கூடாமையாலும், இரண்டாவது வஸ்து இல்லாமையாலும், ஜலூகா (அட்டை) முதலியவைகளின் ஸங்க்ரமணம்போன்ற முக்யமான ஸங்க்ரமணம் இவ்விடத்தில் சொல்லப்பட்டதாகக் கொள்ளமுடியாது. பக்ஷி கூட்டில் ப்ரவேஶிப்பதுபோல் ப்ரவேஶஞ் சொல்ல

வும் முடியாது. ஆகையால் முக்²யார்த்த²ஞ் சேராதபோது லக்ஷணார்த்த²ங் கொள்ளவேண்டுகையால் ப்⁴ரமநிவ்ருத்தியே ஸங்க்ரமணமாகும். ஆத்மாக்களல்லாத அந்நமயம் முதல் ஆநந்த³மயபரியந்தமான பதா³ர்த்த²ங்களை ஆத்மாக்களாக வெண்ணுகையாகிற ப்⁴ரமமானது (கக) யதா²வஸ்தி²தாத்ம ஜ்ஞாநத்தால் நசிக்கிறதென்பதே ஸர்வகோசத்துக்கும் தீர்ந்தபொருள் என்று.

இது பொருந்தாது, அவ்விடத்தில் இவ்விதமான அர்த்த²ஞ் சொல்லுவதற்கு கிஞ்சித்தும் காரணமில்லை.

“ஸர்வவித:” என்றால் கீழ்ச்சொல்லியபடி யறிந்தவனென்று அர்த்த²மாகும்; கீழ்ப் ப்ரகரணங்களை பக்ஷபாதமின்றி பராமர்சிக்கும்போது ஸ்வரஸமாக வேற்படுமர்த்த²மாவது.—முதலில் “ப்³ரஹ்மவிதா³ப்நோதி பரம்” என்று ப்³ரஹ்மஜ்ஞாநமுள்ளவன் பரத்தையடைகிறான் என்று சொல்லிற்று.

பிறகு அந்த ப்³ரஹ்மத்துக்கு “ஸத்யம் ஜ்ஞாநமநந்தம் ப்³ரஹ்ம” வென்று லக்ஷணஞ்சொல்லிற்று. “யோ வேத³ நிஹிதம் கு³ஹாயாம்” என்று உபாஸநத்தை விவரித்தது.

“ஸோऽச்நுதே” என்று ப்³ரஹ்மத்துடன் ஸகல கு³ணங்களையு மநுபவிப்பது ப்ராப்தி என்று ப²லத்தைச் சொல்லிற்று.

அந்த ப்³ரஹ்மத்தையே “தஸ்மாத்³வா ஏதஸ்மாத்” என்று ஆத்மா வெனக்காட்டி அதை ஆகாசாதி³களுக்குக் காரணமாயும் சொல்லிற்று.

இந்த ஸர்வாத்மாவாகிய ப்³ரஹ்மத்தின் ப்ராப்தி பரமபுருஷார்த்த மென்றும், இதுவே ஸர்வோத்தரமான முக்²யமான வாக்யார்த்த²வென்றும் காட்டுவதற்காக, “தஸ்மாத்³வா ஏதஸ்மாத் விஜ்ஞாநமயாத்” என்று சரீரம் முதலியதுக்கு ஆத்மாவாகவும் நிரதிசயாநந்த³முள்ளதாகவு மிதைச் சொல்லிற்று.

(கக) உள்ளபடிக்குள்ள ஆத்மஜ்ஞாநத்தால்.

"ஸோகாமயத" என்று இந்த ப்ரஹ்மாவையே ஶரீராத்³ய பேக்ஷயின்றியே ஸங்கல்பமாத்ரத்தாலேயே ஜகத்தை ஸ்ருஷ்டிப்பதாகவுஞ் சொல்லிற்று.

"ரஸோவைஸ: ரஸம்ஹ்யேவ" "யதே³ஷ ஆகாஶ ஆனந்த³:" என்று இந்த ப்ரஹ்மாவையே நிரதிஶயானந்த³மாகக் காட்டிற்று. "ஏஷஹ்யேவானந்த³யாதி" என்று இந்த ப்ரஹ்மாவையே இதரர்களுக்கு ஆனந்த³த்தை யுண்டுபண்ணுவதாகவும் சொல்லிற்று.

"பீ⁴ஷாஸ்மாத்" என்று இந்த ப்³ரஹ்மாவான ப்³ரஹ்மத்தினிடமிருந்து வாயு முதலான தேவதைகளுக்கு ப⁴யமுண்டென்றுஞ் சொல்லிற்று.

முன் "ஆனந்த³மய ப்ரஹ்மானந்த³யோ:" என்கிறவிடத்தில் ப்³ரஹ்மத்துக்கு அபரிச்சே²த்³யமென்பதை மனஸ்ஸில் வைத்துக்கொண்டு இவ்விடத்தில் அபரிச்சே²த்³யமாவது—அளவில்லாமையென்று காட்டுவதற்காக. "ஸைஷானந்த³ஸ்ய" என்று ஆனந்தத்தை விசாரிக்கிறேனென்று தாமே சொல்லிக்கொண்டு தொடங்கி "ஶதகு³ணம், ஶதகு³ணம்" என்று மென்மேலும் பெருக்கிக்காட்டி "ஸஏகோ ப்³ரஹ்மண ஆனந்த³:" என்று இப்படி யனேக வானந்தக்கூட்டங்கள் ப்³ரஹ்மத்தின் ஓர் ஆனந்த³த்தின் திவலையாகுமென்று சொல்லி முடித்தது.

இத்தால் ப்³ரஹ்மத்துக்கு அபரிச்சி²ன்னமென்றும், அந்த ஆனந்த³மயனே, ப்³ரஹ்ம, ப்³ரஹ்மா, ரஸ:, ஆனந்த³:, ஏஷ:, அஸ்மாத் என்ற பத³ங்களாலே சொல்லப்படுகிறனென்றும் ஏற்பட்டது.

இதற்குமேல் "ஸயஶ்சாயம் புருஷே" என்று புருஷ வென்று சொல்லப்படுகிற ஶரீரத்திலுள்ளவனை முன் ஆனந்த³யோக்³யர் களுக்கு ஆனந்த³ஞகச்சொல்லப்பட்ட ஆனந்த³மய ப்³ரஹ்மாவையும் "யஶ்சாஸாவாதி³த்யே" என்று ஸூர்யமண்ட³லத்திலிருப்பதாக ப்ரஸித்³த⁴னை ப்³ரஹ்மாவையு மெடுத்து இவ்விரண்டாத்மாக்களுக்கும் "ஸஏக:" என்று ஐக்கியத்தைச் சொல்லிற்று.

4

ஸூர்ய மண்டலத்திலுள்ள [illegible], நாராயணனென்றும், [illegible] விசேஷத்தோடு கூடினவனென்றும் [illegible] ச்ருதியிலேற்படுவதால் இவ்வாநந்தமயனுக்கு இவ்விரண்டாகாரமு முண்டென்று காண்பிப்பதற்கே இவனுக்கு அவ[illegible] சொன்னது. "[illegible]" என்று இதற்கடுத்த மேல் வாக்கியம், இப்படியாகையால் "[illegible]" என்பதற்கு கீழ்ச்சொல்லிய அந்தந்த வாகாரங்களோடு கூடிய [illegible], நாராயணனாகவும், [illegible] விசேஷத்தோடு கூடியவனாகவும், ஹ்ருதய குஹையில் உபாஸிக்குமவன் என்ற அர்த்தமே சொல்லவேண்டும்.

இவ்விடத்தில் "[illegible]" வென்ற [illegible] ப்ரயோஜனத்தையும் "[illegible]" என்று [illegible] ஸூத்ரத்தையும் மறந்து கேவல [illegible] திசயத்தாலே [illegible] ஜீவன் கீழ்ச்சொன்ன வாகாரமுள்ள [illegible] என்று கொண்டாலும் "[illegible]" என்பதற்கு கீழ்ச்சொன்ன வாகாரமுள்ள [illegible]மும், [illegible] ஆத்மாவும் ஒன்றென்றறிந்தவன் என்றர்த்தஞ்சொல்லவேண்டுமே தவிர [illegible] பக்ஷங்களைத் தள்ளி "[illegible]" என்றறிந்தவன் என்கிற அர்த்தம் ஒருவழியாலுஞ் சொல்ல முடியாது.

"ஸத்யம் ஜ்ஞானம்" என்கிறவிடத்தில் ஒரு பதத்தாலும் [illegible] மேற்படாது. [illegible]மென்ற [illegible] வஸ்து [illegible] மில்லாமையாவது—ப்ரஹ்மத்துக்கு [illegible]மென்ற தன்னிற்காட்டில் வேறு வஸ்துவை யுடைத்தாகாமையன்று. [illegible] வஸ்துக்களுக்கும் [illegible]வாய் அதுகளோடு [illegible]மாக [illegible] ப்ரஹ்ம, [illegible] ப்ரஹ்ம என்று வ்யவஹரிக்கும்படி கலந்துநிற்கையே.

இதை [illegible] என்று [illegible] ஜர்கள் சொல்லுவார்கள். இப்படிக்கொள்ளாதபோது ப்ரஹ்மத்தைக் காட்டிலும் வேறுபட்டதாக [illegible]மென்றும், [illegible]மென்றும்

இரண்டு வஸ்துக்களுண்டென்று சொல்லுகிற ஸாக்ஷாத்ஸமான பல ப்ரமாணங்கள் விரோதிக்கும்.

"ஸயஶ்சாயம்" என்கிற வாக்கியத்துக்கு உத்கர்ஷாபகர்ஷங்களை விடுவது எவ்விதத்திலு மர்த்தமாகாது.

சரீரத்திலிருக்கு மாத்மாவையும் சூரியமண்டலத்திலிருக்கு மாத்மாவையும் ஒன்றுகப் பார்க்கவேண்டுமென்றால், சரீரம் சூரியன் இது களைத் தள்ளிவிட்டு ஆத்மாவை மாத்திரம் பார்க்கவேண்டுமென்ற வர்த்தம், எப்படிக்கிடைக்கும்? வடத்தின் ஆகாசத்தையும் மடத்தின் ஆகாசத்தையும் ஒன்றுகப் பார்க்கவேண்டுமென்றால் வட மடங்களை விடமுடியுமோ நிக்ருஷ்டமான ஶரீரத்தை யெடுத்ததற்கு பிரதியாக உத்க்ருஷ்ட வஸ்துவை யெடுக்கவேண்டுமாகில் எதிரிகள் மதப்படி ப்ரகரணத்தில் உத்க்ருஷ்டமாகவெடுத்த ப்ரஹ்மமென்ற ஹிரண்ய கர்ப்பனையே யெடுக்கவேண்டுமாகையாலே சூரியனை யெடுத்தது அழகாகாது.

ஆகையால் அபேதமும் உத்கர்ஷாபகர்ஷங்களுடைய த்யாகமும் இவ்விடத்தில் சொல்லப்படவில்லை யாகையாலே எதிரிகள் சொன்ன ஸாமாநாதிகரண்ய பதத்தினர்த்தம் அநுசிதமேயாகும்.

வேத்த்ய என்ற பதத்தோடு சேர்ந்திருப்பதாலும் ஸ்வாரஸ்யத்தாலும் ஜ்ஞாநபதத்துக்கு வ்ருத்தி ஜ்ஞானமர்த்தமாகுமே தவிர ஸம்ஸாரோபாயமர்த்த மாகாது. வேத்த்யபதத்துக்கோ அஸ்வாத்ருகார்த வேத்தி அநேகம் வேத்த்ய ஸர்வா சூர்ய மேவ வேத்த்ய என்கிறவிடங்களில்போல ஜ்ஞாத்ரு ப்ராப்தியே அர்த்தமாகும். அஸ்வாத்ருகார்த வேத்தி என்றவிடத்தில் எதிரிகளும் இரண்டு பதங்களுக்கும் இவ்வர்த்தமே சொல்லியிருக்கிறார்கள்.

ஆகையால் வேத்த்யபதத்துக்குச் சொன்ன வர்த்தமும் சரியாகாது. விஷயஜாத மென்பதைச் சேர்த்துக்கொள்ளவேண்டுகையாலும், ரவிஸங்க்ரமம், வ்யாயிஸங்க்ரமம் என்கிறவிடத்தில்போல் ப்ராப்தி ரூப வர்த்தத்தில் ஸ்வாரஸமாகவிருக்கும் ஸங்க்ரம ஶப்தத்துக்கு

அதற்கு விருத்தமாக பாதம் (நாசம்) என்று அர்த்தங்கொண்டமை யாலும், ப்ரகரணத்துக்கு விருத்தமாக ஆத்மா ஒன்றென்றுசொன்ன தாலும் அந்யயோக்யாநமென்பதற்குச் சொன்ன அர்த்தம் அடியோடு சேராது. இந்த ப்ரகரணத்தில் பஹுவிதமான பேதமே யேற்படு கிறதென்று முன்பே சொன்னோம்.

எதிரிகளுக்கனுகுணமாக இப் ப்ரகரணத்தில் அஜ்ஞாநமோ ப்ரஹ்மத்தினிடம் ப்ரபஞ்சத்துக்கு ஆரோபமோ, ஆத்மாவுக்கு அந்யயோகிகளோடு அபேதஸம்பந்தமோ, அதிஷ்டாந ஜ்ஞாநத்தால் அதற்கு பாதமோ, ப்ரபஞ்சத்துக்கு மித்யாத்வமோ, ப்ரஹ்மத்துக்கு நிர்விசேஷத்வமோ, ஆத்மாவுக்கு ஐக்யமோ, ப்ரஹ்மத்துக்கே ஜீவபாவமோ, ஒன்றும் எவ்விதமும் சொல்லப்படாமையாலும் இவ்விடத்தில் அவர்கள் சொன்ன அர்த்தம் ப்ரகரண விருத்தமென்பது ஸ்பஷ்டமே யாகும்.

ஆகையால் "ப்ரஹ்மவிதாப்நோதி" என்ற உபக்ரம வாக்யத் துக்கு ஸ்வரஸமான அர்த்தத்தைவிட்டு வேறு அர்த்தங்கொள்வதற்குக் கொஞ்சமேனும் வழியில்லை.

வெகுகாலஞ் செய்யப்பட்ட ப்ரஹ்மத்யாநத்தால் ஸம்ஸாரத் துக்குக் காரணமான கர்மம் நசிக்கிறதென்று சாஸ்திரஞ் சொல்லுகை யாலே இப்படி ஒப்புக்கொள்ளில் ஒரு விரோதமுஞ் சொல்லமுடி யாது. மாத்ர த்யாநத்தாலே ஸர்வவிஷம் நீங்குகையாலே ஜ்ஞாநத் துக்கு அஜ்ஞாந நிவ்ருத்தி தவிர வேறு பலமாகாதென்று சொன்னது சரியல்ல.

ஸாத்யமாகில் மோக்ஷம் அநித்யமாகுமென்று சொன்னதும் உசிதமல்ல. கர்மநாசமே ஸாத்யம் ப்ரஹ்மாநந்தஸ்வரூபமான மோக்ஷம் மணியில் ஒளிபோல ஜீவனுக்கு என்றுமுள்ளது என்றன்றோ நாம் சொல்லுவது. "ததர்ஸ்ருஷ்டா" என்கிறவிடத்தில் எதிரிகள் சொன்ன அர்த்தத்துக்கு அநந்யமான உதமொன்றுங் கிடை யாது. விஷயாந்தரவும் ஒருவழியாலும், ப்ரதிபாதநத்தைச் சொல்

லாது. அநுகுணமான ஸம்ஶ்லேஷத்துமில்லாமலிருக்க, தங்களுக்கு அபிமதமான விஷயத்தை யதேஷ்டமாகச் சொல்லில் எந்த ப்ரமாணத்துக்கும் எவர்களும் எந்த விஷயத்தையுஞ் சொல்லலாம். அர்த்தத்துக்கு விஸம்வாதியாயினும் ஒரு வ்யாபாரஞ் செய்யுமவனுக்கு அதில் ஏதேனும் ஒரு தவறுதல்வந்தால் உபேக்ஷிப்பவனிடமிருந்து பயமுண்டாவதுண்டு. ஸர்ப்பம் முதலிய துஷ்டஜந்துக்களைக் கண்டாலும் சத்துருக்களைக் கண்டாலும் பயமுண்டென்பதும் ஸித்தம். பயந்திருக்குமொருவனுக்கு வேறு ஆத்மாவைப் பார்ப்பதை பயநிவ்ருத்திக்கு காரணமாயும் சிலவிடங்களில் காண்கிறோம். வநம் முதலிய ப்ரதேசங்களில் தனித்துப்போகுமொருவனுக்கு யோக்கியனை மற்றொருவனை கண்டபோது பயம் நிவ்ருத்திக்கவில்லையோ? சிலவிடங்களில் உதாரரைப்பார்ப்பது சந்தோஷத்துக்கும் காரணமாகக் காணப்படுகிறது. ஒருவனுக்கு புத்ராதிகளையும் மித்திரனையும் பார்க்கும்போது பிரீதி உண்டாகவில்லையோ? ஆகையால் பிரீதி பயம் இவை முதலியது காரணமுள்ளபோது உண்டாகிறது. அதில்லாதபோது ஒருவனுக்கு வேறு வஸ்து தர்ஶந மாத்திரத்தாலே ஒருவித வாகாரமுமுண்டாகிறதில்லை. இப்படியிருக்க, வேறு வஸ்து இருந்தால் பயமுண்டாகுமென்று இவர் வர்ணித்தது, பயநிவ்ருத்தி தான் ஏன் உண்டாகக்கூடாது; சந்தோஷந்தான் ஏன் உண்டாகக்கூடாது என்ற ப்ரதிபந்தியாலே பராஹதமா யொழியும்.

இப்படி யாகையால் ஒருவித காரணமுமில்லாதபோதும் ஒரு சேதனனுக்கு மற்றொருவனிருந்தால் அவனிடமிருந்து பயம் ஸித்தமென்றுகொண்டு அபயோக்தியால் ஞாநாந்தரமில்லையென்று வர்ணித்தது மிகவும் பரிஹஸிக்கத்தக்கதே யாகும்.

அஸ்மிந் ப்ராசீ தூமகேது: ப்ரதிஷ்டித: என்றிவை முதலிய விடங்களில் நிலைநிற்கையே ப்ரதிஷ்டையென்று (கஎ) ஸம்ப்ரதிபந்ந மாகையாலே அப்படியே இங்கும் ஸ்வாரஸ்யமாகக் கொள்ள

(கஎ) ஒப்புக்கொள்ளப்பட்டது.

வேண்டியிருக்க, இங்குள்ள ச்ருதிகளும் என்பதை "ஸாத்ம்யம் (ஐக்கியம்) என்று வ்யாக்யானித்ததும் தன் ஸாக்ஷி விஷயத்தால் ஸம்வாதித்த வாக்யார்த்தத்தை ஸ்தாபிப்பதற்கே. இப்படியானபோது இவ் விதச் ச்ருதிகளுக்கு விரோதியைச் சொல்லுகிற "ஜகத்பேதம்" என்றவிடத்தில் ஜகத்பேதமும் அதன் விச்லேஷத்தைச் சொல்லுமே தவிர ஸ்வபேத நிஷேதத்தைச் சொல்லாது. ப்ரஹ்மத்தினிடத்தில் ஜீவன் நிலைநிற்கையாவது.—இவன் செய்யும் த்யானமே "யத்ராஸ்ய ஸர்வமாத்மைவாபூத்" என்கிற வசனத்தையு மிங்கு ஜகத்ஸம்பந்தம்.

ஸித்தாந்தத்திலுள்ள ஸம்ஸர்க்கபேதி என்றவிடத்தில் ஸார்வபௌமத விசாரபதி என்ற வர்ணம் ஜகத்ஸம்ஸ்தாமாகையாலும் (கஅ) ரஜதம் (கக) ரஜத ஸம்ஸர்க்கபேதி என்று வ்யவஹாரங் காணப் படாமையாலும், "ஸாத்த்யஸம்ஸர்க்கபேதி" என்பதற்கு எதிரிகள் சொன்ன வர்ணம் அடியோடு சேராதென்பதை பண்டிதர்கள் பராமர்சிக்க,

ப்ரஹ்மத்தை யுபாஸித்தவன் ஸூக்ஷ்மசரீரத்தோடு கூடியவனாய் இந்த லோகத்திலிருந்து பரலோகத்தை யடைந்து ஜகத்யோநி ஸங்கல்ப ப்ரபாவத்தோடும் திவ்யமங்கள விக்ரஹத்தோடுங் கூடியிருக்கும் நிரதிசயாநந்தனை பரமாத்மாவைக் கிட்டுகிறானென்று இப் ப்ரகரணத்துக்கு ஸ்வரஸமாயும் வேறு ப்ரமாணத்துக்கு அநுகுணமாயுமுள்ள அர்த்தங்கொள்ளுகையாலே ஸாத்ம்யமான ப்ராப்தியே ஸம்பத்தைம் என்பதில் ஒரு விரோதமுமில்லை. எங்கும் நிறைந்த பரமாத்மாவுக்கு ஸம்பத்தைஞ் சொல்லவில்லை. அணுவான ஜீவனுக்கே சொல்லுகிறோம்.

ப்ரஹ்மத்தைக்காட்டிலும் வேறுபட்ட தாக பஹுவசனாந்தங்கள் உண்டென்பதை முன்பே ஸாதித்தோம்.

"தஸ்ய ஸர்வேஷு லோகேஷு காமசாரோ பவதி" என்று வேறுஇடத்தில் ப்ரஹ்மோபாஸனத்துக்குச் சொல்லியிருக்கும் ஸமத்

(கஅ) சிப்பி. (கக) வெள்ளி.

நுக்கே இவிடத்தில் ஶோகாநு காரேண ஶ்ருதீ அநுஸந்தாநு என்கிற பதங்களால் (உ௰) ப்ரத்யபிஜ்ஞை வருகையாலே ஶ்ரௌதஸ்ம்ருதியில் “அநுஸந்தாநு” என்பதற்கு இந்த ஶோகங்களை ஶ்ரத்தாவாகவே பார்ப்பவனென்று அர்த்தஞ்சொன்னதும் ஸாஹஸமே யாகும்.

“தஸ்ய ஸர்வேஷு லோகேஷு” என்ற ஶ்ருதிக்கு இவர் பண்ணிய அர்த்தமுஞ் சேராது. “ஸர்வேஷு லோகேஷு காம வாரோ பவதி” “ஸ்வராட் பவதி” என்பதற்கு முன் ப்ராணாத்ய வாக்யங்களுக்கு ஸமமாகச் சொல்லியிருக்கும் ஸர்வதஃ காமசார மும் அங்கு அர்த்தாத் ஏற்படும் கர்மவஶ்யத்வமாகிற அந்யாதீநத்வமும் ப்ரஹ்மவித்துக்குக் கிடையாது என்றர்த்தமே தவிர ஸகல லோக காமசாரமும் ஸ்வாராஜ்யமும் இவனுக்குளதென்று அர்த்தமன்று. அப்படிக்கொள்ளில் ஜீவன நிரவத்யமோக்ஷ ப்ரஹ்மமாய் விடுகிறான். இதுவே ஶ்ருதியென்று சொல்லும் ப்ரமாணங்களுக்கு விரோதமாகும் என்று ஸ்ரீ ஶங்கராசார்யர் அங்கு சொன்ன அர்த்தம். லோகத்தில் மஹேந்த்ரஃ ஸார்வபௌமஃ, யஜ்ஞமூர்த்தா ஈஶ்வர பௌமஃ, விஷ்ணுமித்ர ஸார்வபௌமஃ என்றால் விஷ்ணுமித்ரனுக்கு வாஸ்தவத்தில் பௌமமே யில்லை. இவ்வாக்யத்துக்கு முந்தினவர்களுக்குச் சொன்ன வாகார மிவனுக்கில்லையென்கையிலே தாத்பரியமென்று ஒருவரும் சொல்லார். இப்படி இவருக்கு அர்த்தஞ் சொல்லுவதற்குக் காரணமான (உக) அநந்யஸாத்யமான ஒரு ப்ரமாணமுமில்லை. வேறு ப்ரமாணவசநங் களும் இவ்விதமாக விவர் சிரமப்பட்டே இவருக்குவேண்டிய வர்த்தத் தை சம்பாதிக்கத்தக்கவையாகக் காணப்படுகின்றன.

மேலும் ஶ்ராவ்யமான ப்ரஹ்மத்தை யடைந்தவனுக்கே பிறகு பலவிதமான வாகாரங்கள் ஈப்ஸிதமான லௌகிக்க ப்ராஹ்மணம் முதலிய ப்ரமாணங்களாலே விதிக்கின்றன.

மேலும் “ஸ்வாராட் பவதி” “தஸ்ய ஸர்வேஷு லோகேஷு காமசாரோ பவதி” என்ற வாக்யங்களுக்கு முன்சொல்லிய அநந்ய

(உ௰) ஞாபகம். (உக) உரித்தான.

